பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 18 ஞாயிற்றுக்கிழமை 01.02.2026 | அதிர்வு 184

## ஷிராந்தி, நாமலுக்கு அழைப்பாணை!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவை எதிர்வரும் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### கொட்டும் மழைக்கு மத்தியிலும்

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக தையிட்டியில் போராட்டம்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தையிட்டிப் பகுதியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படும் திஸ்ஸ விகாரைக்கு எதிராக, கொட்டும் மழைக்கு மத்தியிலும் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அங்கு அமைக்கப்பட்ட விகாரையை அகற்றி, அந்த காணிகளை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் நடைபெற்றது. 02

# கொலையாளிகளும் திருடர்களும் மீண்டும் அரியணை ஏற முடியாது!

## மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்; நாமலின் கருத்துக்கு அமைச்சர் பிமல் பதிலடி



கொலையாளிகளும், திருடர்களும் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏற நாட்டு மக்கள் இடமளிக்கமாட்டார்கள் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் 02

# 4ஆம் திகதி வரையில் மழை தொடரும்!

## பேராசிரியர் பிரதீபராஜா எதிர்வுகூறல்

இலங்கையின் தென்பகுதியில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்து வரும் மழை எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் தொடரும் வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் கிடைத்து வரும் மழை மத்திய,

வட மத்திய, வட மேல், ஊவா, சபரகமுவா மற்றும் மேல் மாகாணங்களிலும் எதிர்வரும் 04ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது.

வடக்கு மாகாணத்தின் பல குளங்கள் மீண்டும் வான் பாயத் தொடங்கியுள்ளன. 02






### கிளிநொச்சியில் பொலிஸாரின்

# சமிக்ஞையை மீறிச் சென்ற டிப்பர் மீது துப்பாக்கிச்சூடு!

கிளிநொச்சி – தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் அனுமதி பத்திரமின்றி இன்று அதி காலை 3 மணியளவில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை தருமபுரம் பொலிஸார் சோதனையிட முற்பட்டபோது சமிக்ஞையை மீறிச் சென்ற டிப்பர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள் ளது.

இதன்போது டிப்பரின் எரிபொருள் தாங்கி மற்றும் டயர் என்பன பாதிப் புக்கு உள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் சாரதி தப்பியோடியுள்ளார்.

இது தொடர்பாக தருமபுரம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஷிராந்தி, நாமலுக்கு...

3 ஆம் திகதி பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

வாக்குமூலம் அளிப்பதற்காக ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு முன்னதாக கடந்த 27 ஆம் திகதி பொலிஸ் நிதிக் குற்றப் பிரி வில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

அன்றைய தினம் தான் ஆஜராக முடியாது என்றும், அதற்காக 2 வார கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் அவர் தனது சட்டத்தரணி மூலம் பொலி ஸாருக்குத் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படாததால், பெப்ரவரி 3 ஆம் திகதி மீண்டும் பொலிஸ் நிதிக் குற்றப் பிரிவில் ஆஜராகுமாறு ஷிராந்தி ராஜபக்ஷ வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவையும் எதிர்வரும் 3ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு முன் னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவர் அவ்வேளை நாட்டில் இருக்கவில்லை என்பதால் அதற்காக வேறு திகதியை வழங்குமாறு செய்யப்பட்ட கோரிக்கை யைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக் கப்பட்டுள்ளது.

### 4ஆம் திகதி வரையில்...

மழை தொடரும் வாய்ப்புள்ளதனால் இந்த நிலைமையும் எதிர்வரும்04ஆம் திகதி வரை தொடரும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

எனவே, குளங்களின் வான் பாயும் தாழ் நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் இது தொடர்பாக விழிப்பாக இருப்பது அவசியம்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் அறுவடை மற் றும் நெல் உலர விடும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் இந்த நாட்களில் இந்த செயற்பாடுகளைத் தவிர்க்கவும்.

விதைப்புக்காலத்தின் சீரற்ற மழை, டிட்வா புயல் மற்றும் வெள்ளம், நோய்கள் , குறைவான சந்தை விலை போன்ற பல நெருக்கடிகளில் நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் உங்கள் நெல் அறுவடையையும் நெல் உலர விடும் செயற்பாட்டினையும் திட்டமிட்டு மேற்கொண்டு அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.” – என்றுள்ளது.

### கொலையாளிகளும்...

கருத்துரைக்கும்போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறி னார்.

இனிமேல் ஜனநாயகத்தின் பக்கமே மக்கள் நிற்பார்கள் என்றும், மக்களின் விருப்பம் மிக உயர்ந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் அநீதி செய்பவர்களுக்கு ஒருபோதும் இடம் தரமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டை அதால பாதாளத்துக்குள் தள்ளியவர்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




### திஸ்ஸ விகாரைக்கு...

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தி லும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இந்தப் போராட்டம், நேற்று மாலை ஆரம்பிக்கப்பட்டு இன்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அரசியல்வாதிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் ஜனாதிபதி செயலகம் முன் கொதிக்கும் ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேரில் விஜயம்



கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னெடுத்து வரும் தொடர் உண்ணாவிரதப் போராட்ட இடத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விஜயம் மேற்கொண்டார்.

நீண்ட காலமாகத் தீர்வு கிடைக்காத கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்தும் நோக்கில் இந்தப் போராட்டம் தொடரப்பட்டு வருகிறது.

போராட்ட இடத்திற்கு நேற்று வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கல்வித் துறையின் முக்கிய தூண்களாக இருப்பதால், அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அரசின் கடமை என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், கல்வித் துறையுடன் தொடர்புடைய பணியாளர்களின் பிரச்சினைகளை அலட்சியப்படுத்தும் அரசின் போக்கு கண்டிக்கத்தக்கது என்றும், இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு விரைவான தீர்வு காண அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

போராட்டக்காரர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு எதிர்க்கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்றும், தேவையான அரசியல் அழுத்தங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதனிடையே, தங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரப்போவதாக ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.










# வடக்கில் தொடரும் கனத்த மழையால் இரணைமடுக்குள 8 வான் கதவுகள் திறப்பு!

வட மாகாணத்தில் தற்பொழுது கனத்த மழை பெய்து வரும் நிலையில், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், தற்பொழுது பெரும் போக அறுவடை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மழை காரணமாக அறுவடைக்குத் தயாராக இருந்த நெற் கதிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் நீர் வரத்து அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, நீர்மட்டம் தற்பொழுது 36.6 அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இரணைமடு குளத்தின் 08 வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நுவரெலியா – கிரகரி வாவிக் கரையோரத்தில் பிறந்த சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது!

நுவரெலியா – கிரகரி வாவி கரையோரத்தில் புதிதாகப் பிறந்த சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று இந்தச் சிசுவின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கிரகரி வாவியில் படகு சவாரி செய்யும் ஊழியர்கள் மற்றும் உயிர் காப்பு பொலிஸார் வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் தடயவியல் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர், குறித்த சடலம் புதிதாக பிறந்த சிசு ஒன்றினுடையது என்பதை உறுதி செய்துள்ளனர். தொப்புள் கொடியின் ஒரு பகுதி இன்னும் இருப்பதையும் கண்டறிந்தனர்.

இந்தப் பிரசவம் வைத்தியசாலையில் நடைபெறவில்லை என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனையடுத்து பொலிஸார், நீதிமன்ற உத்தரவை பெற்று, சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளைநுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# இந்தப் போக்கு உகந்ததல்ல!

“தற்போதைய அரசு தனது தோல்விகளையும், ஊழல்களையும் மூடி மறைப்பதற்காகவே எம்மை நீதிமன்றத்துக்கு இழுக்கின்றது. இதனால் அரசுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்திருக்கின்றார்.

“அரசு மேற்கொண்டுள்ள நிலக்கரி ஊழல் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்கள் சோதனையின்றி வெளியேற அனுமதிக்கப்பட்ட மோசடி போன்ற சம்பவங்களை மறைப்பதற்காக எம்மை நீதிமன்றத்துக்கு அழைப்பதில் எந்தப் பயனும் இல்லை. மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பைத் திசைதிருப்பவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.” - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இதற்கிடையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியும் நாமல் ராஜபக்ஷவின் தாயாருமான ஷிரந்தி ராஜபக்ஷவுக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் நாளை மறுதினம் பெப்ரவரி 3 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ‘சிறிலிய’ என்ற பெயரில் பயன்படுத்தப்பட்ட வங்கிக் கணக்குக் குறித்துப் பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஷிரந்தி ராஜபக்ஷ ஜனவரி 27ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் தனிப்பட்ட விடயம் காரணமாக ஷிரந்தி ராஜபக்ஷ ஜனவரி 27 ஆம் அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாவில்லை.

இதனால் பெப்ரவரி 3ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு ஷிரந்தி ராஜபக்ஷவுக்கும், பிறிதொரு விசாரணை தொடர்பில் நாமல் ராஜபக்ஷவுக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அவரது லண்டன் விஜயத்தை ஒட்டி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக விரைவில் ‘ட்ரயல் அட் பார்’ விசாரணை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

முன்னைய அரசுகளில் முக்கிய பங்கு வகித்த அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் மாறி மாறி நீதிமன்றுக்கு அழைக்கப்படுகிறார்கள். குற்றப் புலனாய்வு விசாரணைகளுக்கு முன்னிலையாகுமாறு கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள்.

நாட்டின் நிதி நிலைமை மீண்டும் மோசமான திசையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதுவரை நிறுத்தப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்தொகை மீளளிப்பை 2028 இல் நாடு மீளச் செலுத்தத் தொடங்க வேண்டும். அது குறித்து இந்த அரசாங்கம் அதிகம் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

மாறாக, தனது அரசியல் எதிரிகளை சட்டத்தின் பெயரால் வஞ்சம் தீர்ப்பதில்தான் இந்த அரசின் தீவிரம் தென்படுகின்றது.

இந்தப் போக்கு நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல என்பதுதான் இப்போது சுட்டக் கூடிய விடயமாகும்.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் மலர் வெளியீடும் உதவிகளும்

சைவகலை பண்பாட்டுப் பேரவையின், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், இடம் பெற்ற ஞானச்சுடர் தை மாத 337 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில்,

வெளியீட்டுரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் க.தேவமனோகரன் நிகழ்த்தினார்.

மதிப்பீட்டுரையை பா.தனபாலன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

ஆச்சிரமத்துடன் நீண்டகாலம் தொடர்பில் இருந்த இராசரத்தினம் புவனேந்திர்ராஜா அமரத்துவம் அடைந்த முதலாம் வருட நினைவு நாளும் நினைவு கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவித் திட்டங்களாக, உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலையை சேர்ந்த கம்பர்மலை வித்தியாலயத்தில் தரம் – 10 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு 48,850 ரூபா பெறுமதியான சைக்கிள் வழங்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தை சேர்ந்த டயபரா தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சாதாரண தர மாணவர்களுக்கு பாடப் பயிற்சி வினாத்தாள்கள் 20 ஆயிரம் ரூபா நிதிச் செலவில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றன.








# கந்தையா ஸ்ரீ கணேசனின் 'தேடிய தேட்டங்கள்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்தும் 45 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில், ஜீவநதி சஞ்சிகையின் - 267 ஆவது இதழ் அறிமுகமும் கவிஞர் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய 'தேடிய தேட்டங்கள்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும் எதிர்வரும் புதன்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில் மஞ்சத் தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணி யர் மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரி யர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி (பதில்) கலாநிதி கி.சண்முகநாதன், கலை இலக்கிய விமர் சகர் ஆசிரியர் சி. ரமேஸ், தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாத பிள்ளை குமரன், மற்றும் கலை இலக்கிய விமர்சகர் ஆசிரியர் ந. குகபரன் ஆகி யோர் வெளியிட்டு வைக்கவுள்ளனர்.

# சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை தென்மராட்சியில் திறந்து வைக்கப்பட்டது!







**(த.சுபேசன்)**

தென்மராட்சியில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை திறந்து வைக் கப்பட்டுள்ளது.

வேலாயுதம் வீதி, சாவகச்சேரியில் கடந்த புதன்கிழமை இந்தப் பாடசாலை திறந்துவைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் காலாநிதி ஆறு திருமுருகன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந் தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிவபூமி பாடசாலையை நாடாவெட்டித் திறந்துவைத்ததுடன் நினைவுக் கல்லை யும் திறந்து வைத்தார்.

நிகழ்வில் வரவேற்புரையை சிவபூமி அறக்கட்டளையின் நிர்வாக சபை உறுப் பினரும் இளைப்பாறிய விரிவுரையாள ருமான சி.குணசீலன் நிகழ்த்தினார்.

ஆசியுரையை நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் ஆலய பிரதம குருகலாநிதிசிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்கு ருக்கள், கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் தலைவர் ரிஷி தொண்டு நாத சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் சத்தியசோதியும், கௌரவ விருந்தினர்களாக கேன் புற்றுநோய் காப்பகத் தலைவர் வைத்திய கலாநிதி கமலா வைத்தியநாதன், சாவ கச்சேரி நகர சபை தவிசாளர் சிறிபிரகாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிவபூமி அறக்கட்டளையானது கடந்த 25 ஆண்டுகளாக அறப்பணிகளை சிறப் பாக ஆற்றி வருகின்றது. பிறப்பிலேயே மனவளர்ச்சி குறைந்த விசேட தேவை யுடைய மாணவர்களுக்காக 2003 ஆம் ஆண்டில் கோண்டாவிலிலும், 2016 இல் கிளிநொச்சியிலும் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்ற நிலையில் சாவகச்சேரியிலும் இந்தப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் லண்டனில் வசிப்ப வர்களுமாகிய வைத்தியக் கலாநிதி கனக சபை கதிர்காமநாதன் இரட்ணேஸ்வரி தம்பதிகள் மனமுகந்து வழங்கிய இல்லத் தைப் புனரமைத்து இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெரிய பரப்பளவைக் கொண்ட தென்மராட்சியில் மாற்றுவலுவுடைய குழந்தைகளை மகிழ்வாய் வாழ வைக்கும் நோக்குடன் இந்த பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கற்ற இளைஞர்கள் தொழில் முனைவோரானால் பொருளாதாரத்தில் பெரியளவில் முன்னேறலாம்

## விவசாய மற்றும் கடற்தொழில் அமைச்சின் செயலாளர் சிவஸ்ரீ தெரிவிப்பு



(த.சுபேசன்)

கல்வி கற்ற இளைஞர்கள் தொழில் முனைவோராக உருவாகும் பட்சத்தில் பொருளாதாரத்தில் முன்னேறலாம் என்று வடக்கு மாகாண விவசாய மற்றும் கடற்தொழில் அமைச்சின் செயலாளர் ச.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜெசாக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இளம் விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட செயலமர்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்வி கற்ற இளைஞர்கள் பெரும்பாலும் அரச வேலை வாய்ப்புக்களை நாடுகின்றனர். கற்றவர்கள் தொழில் முனைவோராக உருவெடுப்பது குறைவாக உள்ளது.

இதுவே நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு ஒரு முக்கியக் காரணமாகத் திகழ்கிறது.

இளைஞர்கள் தொழில்முனைவோராக வரும்போது நாட்டில் மிகப் பெரிய பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.வடக்கு மாகாணம் விவசாயம் மற்றும் கடற்தொழிலில் தான் தங்கியுள்ளது.

வடமாகாணத்தில் விவசாயம் மற்றும் கடற்தொழில் சார்ந்த துறைகளில் அதிக வாய்ப்புகளும் உள்ளன.

இலங்கையிலேயே மிக அதிகமான கடல் எல்லையைக் கொண்ட பகுதியாக வடமாகாணம் விளங்குகின்றது. இருப்பினும், இந்த இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

நெல் உற்பத்தியில் வடமாகாணம் மற்ற பகுதிகளை விடப் பின்தங்கியுள்ளது. வடமாகாணத்தில் ஒரு ஹெக்ரெயருக்கு 3 மெட்ரிக் தொன் நெல் விளையும் நிலையில், வெளி மாவட்டங்களில் அது 8 மெட்ரிக் தொன்னாகவும், உலக நாடுகளில் 15 முதல் 20 மெட்ரிக் தொன்னாகவும் உள்ளது.

விவசாயத்தையும் கடற்தொழிலையும் வெறுமனே வயிற்றுப் பிழைப்புக்கான தொழிலாகப் பார்க்காமல், வளர்ச்சிப் பாதைக்கான வணிகமாக மாற்ற வேண்டும்.

மற்ற நாடுகளில் விவசாயம் செய்பவர்கள் அது சார்ந்த உயர்கல்வியைப் பெற்றிருக்கிறார்கள், ஆனால் இங்கு அந்த நிலைமை இல்லை. இன்றைய தலைமுறையினர் சமூக வலைத்தளங்களில் அதிக நேரத்தைச் செலவிடுவதைத் தவிர்த்து, சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

தற்போதைய பொருளாதார நிலையில் இலங்கையின் 9 மாகாணங்களில் பொருளாதார ரீதியாக வடமாகாணம் கடைசி இடத்தில் உள்ளது.

கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வடமாகாணம் 20 சதவிகித வளர்ச்சியை காண்கின்றது என்றால் ஏனைய மாகாணங்கள் 70-80 சதவிகித வளர்ச்சியைக் காண்கின்றன.

எனவே புதிய தொழில் வல்லுநர்களையும் தொழில்முனைவோரையும் உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும்.

இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் செலுத்தும் வேகத்தை தொழிலில் காட்டினால் அது சிறப்பாக இருக்கும்.- என்றார்.

# வீடு இல்லாத பல்கலைக்கழக மாணவிக்கு லண்டன் ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தால் வீடு!





(பழுவூரான்)

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று, கித்துள் கிராமத்தில் யுத்தம் காரணமாக தனது உறவுகளை இழந்து, யானைகளின் தாக்குதலில் வீட்டை இழந்து மிகவும் வறுமைக்கு மத்தியில் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் மாணவியின் குடும்பத்துக்கு லண்டன் ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தின் ஊடாக வீடு கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தனின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய லண்டன் ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தின் தலைவர் ஜெயதேவன் உடனடியாக செயற்பட்டு மட்டக்களப்பு இணைப்பாளர்களான ஆனந்தராஜா, அனோஜன் ஆகியோரின் முயற்சியில் குறித்த குடும்பத்துக்கான வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

குளியலறை, மலசலகூடம், மின்சார வசதிகளுடன் இந்த வீடு அமைத்துக் கையளிக்கப்பட்டது. அத்துடன் இந்தக் குடும்பத்தின் வாழ்வாதாரத்துக்காக கோழி வளர்ப்புக்கான கோழிக்கூடு ஒன்றும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வீடு கையளிக்கும் நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஏறாவூர்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன், பெரிய புல்லுமலை கித்துள் வட்டார பிரதேச சபை உறுப்பினர் சிவானந்தன், ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான ஆனந்தராசா, அனோஜன் ஆகியோர் கலந்து கொண்டு வீட்டைத் திறந்து வைத்தனர்.



# துணுக்காய் தென்னியன்குளத்தில் பிரமாண்ட பொங்கல் நிகழ்வுகள்





விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டமும் துணுக்காய் பிரதேச செயலகமும் இளம்புயல் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த பொங்கல் விழா முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தென்னியன்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரும் ஊடகவியலாளருமாகிய ச.தவசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலாளர் இராமதாஸ் ரமேஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

பொங்கல் நிகழ்வுடன் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில் சிறுவர்கள், இளையவர்கள் மற்றும் முதியவர்களுக்கான கிறிஸ் மரம் ஏறுதல், கிளித்தட்டு, கயிறிழுத்தல், தலையணைச் சண்டை, பலூன் ஊதி உடைத்தல், முட்டி உடைத்தல், தேங்காய் திருவுதல், கிடுகு பின்னுதல் உள்ளிட்ட பாரம்பரிய நிகழ்வுகள் பல நடைபெற்று பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதனை விட தென்னியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட 42 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தென்னியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் செ.நவரத்தினராசா, தென்னியன்குளம் கிராம அலுவலர் செல்வி ந.கஜனி, கிராம அபிவருத்திச் சங்கத் தலைவர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், கமக்கார அமைப்பு தலைவர், நன்னீர் மீன்பிடிச் சங்க தலைவர், விளையாட்டுக் கழக தலைவர் துணுக்காய் பிரதேச செயலக அதிகாரிகள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பெருந்திரளாளோர் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரத்துக்கு 5 லட்சம் பக்தர்கள் வருகைதருவர் என எதிர்பார்ப்பு!

## மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

எதிர்வரும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



பக்தர்களின் நலன் கருதி இதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இது தொடர்பான கூட்டம் இடம்பெற்றபோது அரச அதிபர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவாரம் பாடப்பட்ட திருத்தலமாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரி விழா எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எனவே இத்திருவிழாவை முன்னிட்டு இதனை மிகவும் சிறப்பான முறையில் நடத்துவதற்காகவும் இந்த ஆலயத்துக்கு வரும் பொது மக்களின் தேவையான வசதிகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் முகமாக பாதுகாப்பு தரப்பினர், திணைக்களத் தலைவர்கள் மற்றும் திருக்கேதீஸ்வர கோவில் தரப்பினருடன் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் விஷேட கூட்டம் நடைபெற்றது.

பக்தர்களுக்குத் தேவையான வசதிகள், சுகாதாரம் மற்றும் மின்சாரம் நீர் விநியோகம் வருகை தரும் அடியார்களுக்கான உணவு வழங்கல், பாதுகாப்பு, மற்றும் ஒழுங்கு முறைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் பாதுகாப்புக்கு மேலதிகமாக முப்படைகளின் பாதுகாப்பும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் இந்த சிவராத்திரி விழாவுக்கு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே இதற்கேற்றவாறு தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சேவைகளும் இணைந்து கூட்டு போக்குவரத்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாலா பக்கங்களிலிருந்தும் திருக்கேதீஸ்வரத்துக்கு வரும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான சகல எற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.– என்றார்.





# செல்வகந்த, தியனகல மேற்பிரிவுக்கு உலர் உணவுகள், ஆடைகள் வழங்கல்!

(நடராஜா மலர்வேந்தன்)

கடந்த வருடம் நாட்டில் டித்வா புயல் அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளாகிய பதுளை பிரதேசத்துக்கு உட்பட்ட செல்வகந்த, தியனகல மேற்பிரிவு ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு அஷிசா பவுண்டேசனின் ஆதரவில் பகி பாலசந்திரன் பவுண்டேஷனால் உலர் உணவுப் பொதிகள், புதிய ஆடைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதனை வழங்கி வைத்த அஷிசா பவுண்டேசன் நிறுவுனர் மற்றும் பகி பாலச்சந்திரன் பவுண்டேஷன் ஆகியோருக்கு பயனாளிகள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.





# வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் அன்னதான மண்டபம் திறந்துவைப்பு!









**(மரியசீலன் திலைக்ஸ், வடமராட்சி நிருபர்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு ஆழியவளை சக்தி அம்மன் ஆலயத்தில் அன்னதான மண்டபம் ஒன்று இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அன்னதான மண்டபத்தை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் திறந்து வைத்துள்ளார்.

ஆலயத் தலைவர் பொன்னுச்சாமி பிரேமதாஸ் தலைமையில் மங்கள விளக் கேற்றலுடன் திறப்பு விழா ஆரம்ப மானது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், மருத் துவர் வேலுப்பிள்ளை சிவநேசன், சமா தான நீதிவான் ஜெயபால கிருஷ்ணன், காணி நன்கொடையாளி பொன்னையா பெரியதம்பி மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் யுவதி பலாத்தகாரம் சட்டத்தரணி ஒருவருக்கு விளக்கமறியல்!

**(கனகராசா சரவணன்)**

காத்தான்குடி யுவதி ஒருவரை பலாத் காரமாக பாலியல் துஷ்பிரயோகம் மேற் கொண்டார் என்று சந்தேகத்தில் கைது செய் யப்பட்ட சட்டத்தரணி எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் உள்ள பிரதேசம் ஒன்றில் இளம் யுவதி ஒருவ ருக்கு உணவில் மயக்க மருந்து கொடுத்து அவரை பாலியல் துஷ்பிரயோகம் மேற் கொண்டு 3 மாத கர்ப்பிணியாக்கிய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப் படையில் கைது செய்யப்பட்ட சட்டத் தரணியையே எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த சட்டத்தரணி வேலைக்கு அமர்த் திய யுவதி, காலையில் இருந்து இரவு 8.30 மணிவரை இரண்டு வருடங்களாகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்தநிலையில்கடந்த ஒக்ரோபர்மாதம் அலுவலகத்தில் தனிமையில் கடமை யில் ஈடுபட்டுக் கொண்டிருந்த யுவதிக்கு குறித்த சட்டத்தரணி மதிய உணவு பாசல் ஒன்றை வழங்கியுள்ளார். அவரை சாப் பிடுமாறு தெரிவித்ததையடுத்து அவர் அதனை வாங்கி உட்கொண்ட நிலையில் சில நிமிடங்களில் பின்னர் அவருக்கு மயக்க நிலை ஏற்பட்டது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரை சட்டத்தரணி அந்த யுவதியின் விருப்பம் இல்லாமல் அவரை பாலியல் துஸ்பிரயோகம் புரிந் துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர் குறித்த யுவதி தனக்கு நேர்ந்த வன்கொடுமை தொடர்பாக தனது குடும்பம் உட்பட எவருக்கு தெரிவிக்கா மல் அங்கு வேலைக்குச் செல்லாமல் இருந்துள்ளார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட யுவ திக்கு அந்த சட்டத்தரணி, திருமணம் பேசி கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி திருமணம் முடித்து வைத்துள்ளார். திருமணம் முடித்து ஒருவாரத்தின் பின் னர் குறித்த யுவதி வாந்தி எடுத்து மயக்க மடைந்துள்ளார். அவரைத் தனியர் வைத்தியசாலையில் அனுமதித்த போது, அவர் 12 வாரங்கள் கொண்ட மூன்று மாத கர்ப்பிணியாக இருப்பதை கண்டறிந்தனர்.

இதனையடுத்து திருமணத்துக்கு முன் னர் கர்ப்பமாகியுள்ளதை அறிந்த யுவதி யைத் திருமணம் முடித்த கணவர் யுவதி யுடன் முரண்பட்டுக்கொண்டு அவரை விட்டுச் சென்றுள்ளார். இந்த நிலையில் யுவதி மீது பாலியல் பலாத்தகாரம் இடம் பெற்றுள்ளது என்று தேசிய சிறுவர்கள் பெண்கள் அமைச்சுக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது. இதனை அடுத்து யுவதியை பிரதே செயலக சேவை நடும் மகளிர் பிரிவினர் அவரைப் பாதுகாப் பான இல்லத்தில் கொண்டு சென்று தங்கவைத்தனர்.

சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் அந்தச் சட்டத் தரணிக்கு எதிராக பலாத்தகார கற்பழிப் புக் குற்றச்சாட்டின் கீழ் வழக்கு தாக்கல் செய்தனர். வழக்கை விசாரணைக்கு எடுத் துக் கொண்ட நீதிவான் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸா ருக்கு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த சட்டத்தர ணியை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பொலிஸார் கைது செய்து, நீதி மன்றில் ஆஜர்படுத்தியபோது எதிராளி சார்பில் சட்டத்தரணி எம்.ஐ.இயாஸ்டீன் தலைமையில் ஜெகன் உட்பட்ட 4 சட்டத் தரணிகளும் வழக்காளி சார்பில் சட்டத் தரணி றிஸ்வி தலைமையிலான சட்டத் தரணிகளான யோகேஸ்வரன், கமல தாசன், வேணுதாசன், நஜீபா, ரம்சீயா ஆகியோரும் ஆஜராகி விண்ணப்பங் களை முன்வைத்து நிலையில், அவரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.



# சம்மாந்துறை நகர மண்டபத்தில் ‘டேலன்ட் பிளஸ் டீவியின்’ நிகழ்வு

(திகாமடுல்ல நிருபர்)

சம்மாந்துறை “டேலன்ட் பிளஸ் டீவியின்” நிகழ்வு சம்மாந்துறை நகர மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

அமைப்பின் தவிசாளர் முஹம்மட் சில்ஹான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட அரசா அதிபர் சிந்திக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாகவும், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித விதமுல்ல, சிரேஷ்ட பொலிஸ் அதியட்சகர் கே.ஏ.பீ.கஸ்தூர் ஆராச்சி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, பிரதேச சபையின் தவிசாளர் ஐ. எல்.எம்.மாஹீர், திகாமடுல்ல மீடியா போரத்தின் தலைவர், ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸ், சிரேஷ்ட அறிவிப்பாளர்களான எம். எஸ். எம். இர்பான், இர்ஷாத் ஏ காதர் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

டேலன்ட் பிளஸ் டீவியின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு ஊடகம் தொடர்பிலான செயலமர்வு அண்மையில் நடத்தப்பட்டபோது அந்தச் செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டன. அதிதிகளும் ஏற்பாட்டு குழுவினரால் கௌரவிக்கப்பட்டனர்.











# இலங்கைக்கு ரூ.4 பில்லியன் இந்தியாவின் பட்ஜெட் அதிரடி!



இந்தியாவின் 2026 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மூலம் இலங்கைக்கு உதவியாக 4 பில்லியன் இந்திய ரூபா உதவியை இந்திய அரசு முன்மொழிந்துள்ளது.

இது 2025 ஆம் ஆண்டை விட ஒரு பில்லியன் ரூபா அதிகமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026ஃ27 நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் இது சேர்க்கப்பட்டுள்ளதுடன், பட்ஜெட் டை இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை, நடப்பு நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 7.4 சதவீதமாக வளர்ச்சியடைகிறது.

பணவீக்கம் கிட்டத்தட்ட 2 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வங்கதேசத்துக்கு வெளிநாட்டு உதவியை பாதியாகக் குறைத்துள்ளது மத்திய அரசு!



மத்திய பட்ஜெட்டில் வங்கதேசத்திற்கான வெளிநாட்டு உதவி நிதியை பாதியாகக் குறைத்து மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்துக்களுக்கு எதிரான செயல்களை வங்கதேச அரசு தடுக்கத் தவறியதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பட்ஜெட்டில் வெளிநாடுகளுக்கு உதவி நிதியை ஒதுக்குவது வழக்கம். அந்த வகையில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ரா மன் தாக்கல்செய்ததன்னுடைய 9 ஆவது பட்ஜெட்டிலும் இந்த உதவி நிதி ஒதுக்கப்பட்டது. பூட்டான், நேபாளம், இலங்கை, மாலதீவு, ஆப்கானிஸ்தான், மியான்மர் மற்றும் ஆப்ரிக்க நாடுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், வங்கதேசத்துக்கான உதவி நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு அதிரடியான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்துக்கள் தொடர்ந்து கொல்லப்பட்டு வரும் நிலையில், அதனை தடுக்காமல், இந்தியாவுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருவதால், வங்கதேசத்துக்கான நிதி பாதியாக குறைத்து அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஆண்டுக்கு ரூ.120 கோடி வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ரூ .60 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.120 கோடியில், பதற்றமான சூழல் காரணம க ரூ. 34.48 கோடி மட்டுமே செ லவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் அண்டை நாடுகளுக்கான மொத்த நிதியுதவி ரூ. 5,686 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில், பூட்டான் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. பூட்டானுக்கு ரூ. 2,289 கோடியும், நேபாளத்துக்கு ரூ.800 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவரும் இலங்கைக்கு ரூ. 400 கோ டி, மாலத்தீவுக்கான நிதி 8 வீதத்தால் குறைக்கப்பட்டு ரூ. 550 கோடியாக உள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு ரூ. 150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மியான்மருக்கு ரூ. 300 கோடியும், ஆப்பிரிக்க நாடுகளுக்கு ரூ.225 கோடியும், இலத்தீன் அமெரிக்காவுக்கு முந்தைய ஆண்டை விட இருமடங்கு உயர்த்தி ரூ. 120 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், ஈரான் நாட்டில் உள்ள சாபஹார் துறைமுகத் திட்டத்துக்கு நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளை இணைக்கும் மிக முக்கியமான திட்டமாக இது இருந்தாலும், தற்போதைய அமெரிக்க அரசியல் சூழல் இதற்குத் தடையாக உள்ளது. எனவே , சாபஹார் துறை முக திட்டத்துக்கு எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிதி சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

# அமெரிக்க அரச நிர்வாகம் பகுதியளவில் முடங்கியது!



அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிதி சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக, நேற்று நள்ளிரவு முதல் அமெரிக்க அரச நிர்வாகம் பகுதி அளவில் முடங்கியுள்ளது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினருக்கும்இடையேகுடியேற்றக்கொள்கை தொடர்பாக ஏற்பட்ட மோதலே இந்த முடக்கத்துக்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.

மினியாபோலிஸ் நகரில் அண்மையில் பெடரல் அதிகாரிகளால் அலெக்ஸ் ப்ரெட்டி என்ற அமெரிக்கக் குடிமகன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதனால், குடியேற்ற நடைமுறையாக்கப் பிரிவினருக்கு கூடுதல் நிதி வழங்க ஜனநாயகக் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதன்படி, அதிகாரிகள் முகக்கவசம் அணிய தடை விதித்தல், உடல் பொருத்து கமராக்களைக் கட்டாயமாக்குதல் போன்ற புதிய விதிகளைக் கொண்டு வந்தால் மட்டுமே நிதிச் சட்ட மூலத்துக்கு ஆதரவு தருவோம் என்று அவர்கள் பிடிவாதம் பிடித்ததால் இந்த முடக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த முடக்கத்தால் சுமார் 8 லட்சம் அரச ஊழியர்கள் பாதிக்கப்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய, பாதுகாப்பு, போக்குவரத்து, கல்வி மற்றும் திறைசேரி ஆகிய துறைகள் பாதிக்கப்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அஞ்சல் சேவை, ராணுவம் மற்றும் அவசரக்கால மருத்துவச் சேவைகள் வழக்கம் போல் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. “நாங்கள் ஒரு ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம், ஆனால் அவை இன்னும் முறைப்படி சட்டமாக்கப்பட வேண்டும். இந்த முடக்கம் மிகக் குறுகிய காலமே நீடிக்கும்” என்று ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாளை நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை கூடும்போது, தற்காலிகமான நிதி ஒதுக்கீடு குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது கடந்த ஓராண்டில் ஏற்பட்டுள்ள இரண்டாவது அரச முடக்கம் என்பதும், 2025 இல் ஏற்பட்ட 43 நாள்கள் நீடித்த முடக்கமே அமெரிக்க வரலாற்றில் மிக நீண்ட முடக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஐவரி கோஸ்ட் ஜனாதிபதியை விமர்சித்த

# மாலி நாட்டைச் சேர்ந்தஎம்.பிக்கு மூன்று ஆண்டுகள் சிறை விதிப்பு!

ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி அலசான் ஒட்டாராவை சமூக வலைதளங்கள் மற்றும் நேர்காணல்களில் அவதூறாகப் பேசியதற்காக, மாலி நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாமது ஹாவா காசாமா என்பவருக்கு ஐவரி கோஸ்ட் நீதிமன்றம் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.



மாலி நாட்டின் இடைக்கால நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் காசாமா, கடந்த ஜூலை மாதம் ஐவரி கோஸ்ட் சென்றிருந்த போது அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

84 வயதான ஐவரி கோஸ்ட், ஜனாதிபதி அலசான் ஒட்டாராவை இவர் “சர்வாதிகாரி” என்றும் “மாலி நாட்டின் எதிரி” என்றும் விமர்சனம் செய்துள்ளார்.

இந்த விடயம், அந்த நாட்டு நிறுவனங்களைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும் செயல் என அரசுத் தரப்பு சட்டத்தரணிகள் வாதிட்டுள்ளார்.

இதேவேளை, காசாமாவுக்கு வழங்கப்பட்டுள்ள 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை மிக அதிகமானது என்றும், இதுவொரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்றும் அவரது சட்டத்தரணிகள் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான மாலி மற்றும் ஐவரி கோஸ்ட் இடையே கடந்த சில ஆண்டுகளாகவே சுமூகமான உறவு இல்லை.

கடந்த 2020 இல் மாலியில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 49 ஐவரி கோஸ்ட் வீரர்கள் மாலியில் கைது செய்யப்பட்ட சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையே பெரும் போரை உருவாக்கும் சூழலை ஏற்படுத்தியது.

பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டாலும், கசப்புணர்வு நீடிக்கிறது.

இப்படியொரு நிலையில், மாலி அரசு பிரான்ஸுடனான உறவைத் துண்டித்து விட்டு ரஷ்யாவின் ஆதரவை நாடியுள்ளது.

ஆனால், ஐவரி கோஸ்ட் இன்னும் பிரான்ஸின் நெருங்கிய நட்பு நாடாகவே இருந்து வருகிறது.

ஒரு அண்டை நாட்டு நாடாளுமன்ற உறுப்பினருக்கு, அந்த நாட்டு ஜனாதிபதியை விமர்சித்ததற்காகச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருப்பது, மேற்கு ஆப்பிரிக்காவில் நிலவும் அரசியல் பதற்றத்தின் உச்சத்தைக் காட்டுகிறது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 01/02/2026


## கனடா மினசோட்டா அல்ல: கரி ஆனந்த சங்கரி கருத்து



அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்தில் மத்திய

02▶







## ஆர்க்டிக் குளிரில் உறைந்த டொராண்டோ:

# 10 ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்பட்ட மோசமான வானிலை எனத் தகவல்

**டொராண்டோவில் தற்போது வெறும் குளிர் மட்டுமல்ல, கடுமையான உறைபனி நிலை நிலவி வருகிறது. இந்த நகரம் ஆர்க்டிக் காற்று முறைமையின் பிடியில் சிக்கியுள்ளதாகவும், இது வழக்கத்தை விட நீண்ட காலமாக தொடர்வதாகவும் வானிலை நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.**

**டொராண்டோவில் இதற்கு முன்பும் இவ் வளவு குளிர் நிலவியிருந்தாலும், இந்த முறை குறிப்பிடத்தக்கது அதன் நீண்ட காலத் தொடர்ச்சியே என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.**

கனடிய சுற்றாடல் திணைக்கள வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கையில்,

நகரம் தொடர்ந்து இவ்வளவு நாள்கள் பூஜ்ஜியத்துக்கு கீழான வெப்பநிலையை அனுபவித்தது 10 ஆண்டுகளுக்கும் மேலாக இல்லை. நகரத்தின் மீது நிலைத்து நின்றுள்ள ஆர்க்டிக் காற்றுத் தொகுதி குளிரை அடக்கி வைத்திருப்பதால், இயல்பான பருவ நிலை திரும்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறினர்.

தேசிய வானிலை அமைப்பின் தகவலின்படி, கடந்த சனிக்கிழமை வானிலை சூரியஒளியும் மேகங்களும் கலந்ததாக இருக்கும். மதிய நேரத்தில் மணிக்கு 20 கி.மீ. வேகத்தில் காற்று வீசும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை வானம் தெளிவாகவும் வெயிலுடனும் இருக்கும். அதிகபட்ச வெப்பநிலை 6 பாகை செல்ஸிய ஸாக இருக்கும். இரவு நேரத்தில் மீண்டும் வெப்பநிலை குறைந்து, தெளிந்த வானின் கீழ் −13 பாகை செல்ஸியஸ் வரை செல்லும் என அறிவிக்கப் பட்டது.





# சோரா டவுன்ஷிப்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் மரணம்

ஒன்டாரியோ மாநிலம் ஆக்ஸ்ஃபோர்ட் கவுண்டியில் உள்ள சோரா டவுன்ஷிப்பில், நேற்று சனிக்கிழமை நடந்த ஸ்னோமொபைல் மற்றும் லொறி மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் உயிரிழந்துள்ளார்.

ஆக்ஸ்ஃபோர்ட் கவுண்டி பொலிஸாரின் தகவலின்படி, காலை 10:30 மணியளவில் வீதி 92 மற்றும் 23 ஆம் ஒழுங்கை சந்திப்புப் பகுதியில், கடுமையான வாகன விபத்து நடந்ததாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அவசர சேவைகள் அங்கு சென்றன.

14 வயதுடைய ஸ்னோமொபைல் ஓட்டுநர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு அவர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் வேறு யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

விபத்து நடந்த இடத்தில், முன்புறம் கடுமையாக சேதமடைந்த வெள்ளை நிற லொறி ஒன்றையும், இரண்டு ஸ்னோமொபைல்கள் இருப்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியதுடன், அவற்றில் ஒன்று சாய்ந்த நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்த விபத்தை நேரில் பார்த்தவர்கள் அல்லது சம்பவ நேரத்தில் அந்தப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட காணொலி உள்ளவர்கள், 1-888-310-1122 என்ற எண்ணில் பொலிஸை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



## கனடா மினசோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசின் படைகளால், இரண்டு குடிமக்கள் கொல்லப்பட்டமை குறித்து கனடா பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

"கனடா மினசோட்டா அல்ல" அமெரிக்காவில் நடக்கும் விடயங்களுக்கு தான் தீர்ப்பு வழங்க விரும்பவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில் "கனடா மினசோட்டா அல்ல" என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

கனடாவில் குடியேற்ற விதிகளை அமுல்படுத்தும் போது சட்டம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு கனடா சுமார் 22,000 பேரை முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி, மனிதாபிமானத்துடன் வெளியேற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் தற்போதைய செயற்பாடுகளால் உளவுத்துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் சிக்கல் உள்ளதா என்ற கேள்விக்கு, இரு நாடுகளுக்கும் இடையே ஒரு கடினமான காலம் நிலவினாலும், பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்பு தொடர்ந்து வலுவாக உள்ளதாக அவர் கூறியுள்ளார்.




# பிராம்டனில் துப்பாக்கிச் சூடு: 37 வயது நபர் மீது குற்றச்சாட்டு

பிராம்டனில் உள்ள ஒரு வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் 37 வயது ஆண் ஒருவர்மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பீல் பொலிஸாரின் தகவலின்படி, மாலை 5:30 மணியளவில், பிராமலியா ரோடின் கிழக்குப் பகுதியில் உள்ள ட்ராட்ஃபோர்ட் ரோடு மற்றும் பால்மோரல் டிரைவ் சந்திப்புக்கு அருகிலுள்ள ஒரு வீட்டில் துப்பாக்கிச் சூடு நடந்ததாக அழைப்பு வந்துள்ளது.

அங்கு சென்ற பொலிஸார், 26 வயது ஆண் ஒருவரை உயிருக்கு ஆபத்தான துப்பாக்கி காயங்களுடன் கண்டறிந்தனர். பின்னர், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொலிஸ் தெரிவித்தது.

சம்பவ இடத்திலேயே ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கடந்த சனிக்கிழமை, அந்த நபர் பிராம்டனில் வசிக்கும் கிரிஸ்டோபர் பெஹாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் மீது இரண்டாம் நிலை கொலை என்ற குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கான்ஸ்டபிள் டெய்லர் ஹாஃப்யார்ட் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறுகையில், சந்தேகநபரும் பாதிக்கப்பட்டவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்களாக இருந்தனர் என்று தெரிவித்தார். ஆனால், இதற்கு மேற்பட்ட விவரங்களை அவர் வெளியிடவில்லை.

இந்த துப்பாக்கிச் சூடு ஒரு தனிப்பட்ட சம்பவம் ன்றும், பொதுமக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்றும் ஹாஃப்யார்ட் மேலும் கூறினார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் என்ன என்பதைக் குறித்து பொலிஸார் இதுவரை தகவல் வெளியிடவில்லை.

இந்த சம்பவம் முழுமையாக அந்த வீட்டுக்குள்ளேயே நடந்தது என்றும், பொதுப் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘அவன் ஒவ்வொரு நிமிடத்தையும் நேசித்தான்’: உயிரிழந்த இராணுவ வீரர் குறித்து தந்தை கருத்து





லாட்வியாவில் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்த கனடிய துப்பாக்கி வீரர் செபாஸ்டியன் ஹால்மாஜியன், தனது வாழ்க்கையை முழுவதுமாக இராணுவ சேவைக்காக அர்ப்பணித்தவர் என்று அவரது தந்தைதெரிவித்துள்ளார்.

“செவ்வாய்க்கிழமை அவன் என்னிடம் பேசினான். அங்கே இருப்பதில் அவன் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தான். தன் நாட்டுக்குச் சேவை செய்வதில் பெருமை கொண்டிருந்தான்,” என்று செபாஸ்டியனின் தந்தை ஆலின் தெரிவித்தார்.

நாட்டிலும் வெளிநாட்டிலும் பொதுச் சேவைக்காக தீவிரமாக அர்ப்பணித்த இளைஞராக தனது மகனை அவர் விவரித்தார்.

“அவன் கனடிய ஆயுதப்படைகளின் பெருமைக்குரிய உறுப்பினர். இதைச் செய்யும் ஒவ்வொரு நிமிடத்தையும் அவன் நேசித்தான்,” என்று ஆலின் கூறினார்.

“நான் என்னுடைய அனைத்தையும் இழந்துவிட்டேன். ஆனால் என் மகன் நம் முழு நாட்டுக்காக மிகவும் முக்கியமான ஒன்றை செய்திருக்கிறான்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்டாரியோ மாநிலம் ஹாமில்டனைச் சேர்ந்த 24 வயதான செபாஸ்டியன், Operation REASSURANCE என்ற பணிக்காக லாட்வியாவில் பணியமர்த்தப்பட்டிருந்தார் என்று கனடிய ஆயுதப் படைகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் சுமார் மூன்று ஆண்டுகளாக இராணுவத்தில் பணியாற்றி வந்தார். இது அவருடைய முதல் வெளிநாட்டு பணியமர்த்தல் ஆகும்.

கனடிய கூட்டு நடவடிக்கைகள் கட்டளை பொதுத் தொடர்புத் துறை, அவர் உயிரிழந்த நேரத்தில் கடமையில் இருந்தார் என்பதை உறுதிப்படுத்தியது. ஆனால், மரணத்திற்கான காரணம் குறித்து குறிப்பிட்ட தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இந்த சம்பவம், வெளிநாட்டில் பணியமர்த்தப்பட்டுள்ள கனடிய வீரர்களின் பாதுகாப்புக்கு கூடுதல் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் எதுவும் இல்லை என்று கனடிய ஆயுதப்படை தெரிவித்துள்ளது.

லாட்வியாவின் இராணுவ பொலிஸ் விசாரணையைத் தொடங்கியுள்ளதுடன், அதற்கு கனடிய படைகளின் இராணுவ பொலிஸ் ஆதரவளித்து வருகிறது.